கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 242 /2016

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 கமலஹாசன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 02.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் எந்த புல எண் குறித்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.710/5 ஆகும். பி.சா.ஆ.3 புல வரைபடத்தில் உள்ள விவரங்கள் நான் தரவில்லை என்றும், எனது தந்தையால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.710/5 க்கு கிழக்கே யாருடைய நிலம் உள்ளது என்றால் சுப்பிரமணியன் நிலம் உள்ளது. மேற்கே இருதய மேரி நிலம் உள்ளது. இருதய மேரியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் மேற்கே யார் உள்ளதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்து விவரத்தில் நான்கெல்லை விவரத்தில் யார் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எவ்வளவு விஸ்தீரனத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது.

2. பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் எங்களுக்கு சம்மந்தமில்லாதது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் மூன்றும் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 புகைப்படங்கள் எந்த தேதி மாதம் வருடத்தில் எடுக்கப்பட்டது என்றால் தெரியாது. தேதி பி.சா.ஆ-7 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ல் தேங்காய் குவியல் மேல் பலகை வைக்கப்பட்டு மேற்படி புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது என்றால் பி.சா.ஆ.7 புகைப்படம் எடுக்கும் போது நான் இல்லை. பி.சா.ஆ.7 புகைப்படத்தில் உள்ள தேங்காய் குவியல் எந்த இடத்தில் வைத்து மேற்படி புகைப்படமானது எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 ஆவணம் தாவா சொத்திற்கு எவ்வகையிலும் வலு சேர்க்காது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 என்ன ஆவணம் என்றால் நல்லபெருமாள் அவரது மகள் இளையராணிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் ஆவணமாகும்.

3. மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள புல எண்.710/4 மற்றும் 710/5 ற்கான பட்டா எண்.1041 ல் நல்லபெருமாளின் பெயர் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது எந்த வகையில் மேற்படி சொத்து நல்லபெருமாளுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு எழுதியுள்ளாரா என்றால் எழுதியுள்ளார். பி.சா.ஆ.2 பட்டாவானது ஏற்கனவே வழங்கப்பட்ட பட்டா எண்.1041 யை இரத்து செய்து வழங்கப்பட்ட பட்டாவா என்றால் இல்லை. பி.சா.ஆ.2 பட்டா தான் அசல் பட்டா ஆகும். பி.சா.ஆ.2 பட்டாவை வைத்து தான் பி.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டது.

பி.சா.ஆ.2 பட்டா எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டதாகும். பி.சா.ஆ.2 ஆவணத்தை நாங்கள் மோசடியாக பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ.2 ஆவணத்தை வைத்து கொண்டு தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதை காண்பிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நல்லபெருமாள் கிரையம் பெற்ற வகையில் வாதிகளுக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. எனக்கோ, எனது குடும்பத்தினருக்கோ தாவா சொத்து ஒருகாலமும் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வாதிகளிடமிருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக ஆவணங்கள் தயார் செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நல்லபெருமாள் 1ம் வாதியின் வயோதிக தன்மையை பயன்படுத்தி கொண்டு பொய்யாக பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

5. 1ம் வாதி கிரையம் பெற்ற சொத்தில் அவருக்கு மட்டுமே உரிமை உடையது என்றால் சரியல்ல. 1ம் வாதி உயிருடன் இருந்த சமயத்தில் தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 7ம் வாதிக்கு தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுததியுள்ளார் என்பதால் 7ம் வாதி தான் தற்போது தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வருவதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. கடந்த 2016ம் வருடம் பொய்யான ஆவணங்கள் மூலம் நானும், எனது குடும்பத்தினரும் வாதிகளின் தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தை இடையூறு செய்ததால் தான் இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டாவின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.710/5 ஆகும். அரசு அதிகாரிகள் முறையாக விசாரணை செய்து தான் எங்களுக்கு பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். அரசு அதிகாரிகள் வாதிகளுக்கோ அல்லது எனக்கோ சாதகமாக நடந்து கொண்டார்களா என்றால் இல்லை.

**9 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 முகம்மது ஹனீஃபா திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 02.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **முகம்மது ஹனீஃ பா** | கிராமம் | |
| த/பெ | சாகுல் ஹமீது | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | **42** |

**<u>பி.வ.சா.1– – முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 6ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக் கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேற்கொண்டு ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்      36/2024

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 குமரேசன்   திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 02.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் ரமேஷ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படிவா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தும் சரி என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பாகப் பிரிக்கப்படாத சொத்தை தான் சுவாதினம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது சுவாதீன உரிமையை தான் எனது அக்கா மகளான 2ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ரவினா, ரமேஷ் மனைவி ராதிகாவிற்கு சுவாதீனம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ரமேஷின் மனைவி தான் ராதிகா என்றால் சரிதான். மேற்படி ராதிகாவிடமிருந்து கிரைய தொகை முழுவதும் பெற்று கொண்டோமா என்றால் பெற்றுக்கொண்டோம்.

2. 2ம் பிரதிவாதி அவரது உரிமையையும் ராதிகாவிற்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் உடைமையும் இல்லை என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை தாவா சொத்தை எவ்வகையிலும் உருமாற்றம் செய்ய கூடாது என்ற கூறி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமாலே இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி தெரியுமா என்றால் 2024ம் வருடம் செப்டம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேதி நியாபகம் இல்லை. வருவாய் துறை ஆவணங்களை சரிசெய்வதற்கு முன்பே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

3. இவ்வழக்கில் எனக்கோ, எனது தங்கை மகள் 2ம் பிரதிவாதிக்கோ தற்போது எவ்வித உரிமையும் இல்லை என்பதால் இவ்வழக்கை அனுமதிக்கப்படுவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>3 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அரசு அதிகாரிகள் முறைப்படி தான் பட்டா மாற்றமோ, உட்பிரிவோ செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அரசு அதிகாரிகள் சதிசெய்து எங்களுக்கு

சாதகமாக நடந்து கொண்டார்களா என்றால் இல்லை. அரசு அதிகாரிகள் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரிதான். அரசு அதிகாரிகள் சடடத்திற்குட்பட்டு தான் அவர்களது பணிகளை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண்     30/2023

வாதி தரப்பு சாட்சி –1  சக்திவேல் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 02.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ள இ அட்டவணை சொத்தான புல எண்.944/1C ன் பட்டா முதலான வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். புல எண்.944/1C ன் பட்டா தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில், அதில் யார் பெயர் உள்ளது என்றால் எனது தந்தை மற்றும் பெரியப்பா பெயர் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது புல எண்.944/1C ன் பட்டா என்றும், மேற்படி பட்டாவில் 1 மற்றும் 3 பிரதிவாதிகளாகிய முருகன் மற்றும் பழனிவேல் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். **மேற்படி பட்டா எண்.3464 ற்கான கணினி பதிவிறக்க நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. புல எண்.944/1C ன் மொத்த விஸ்தீரனம் சுமார் 46 சென்ட் என்றால் சரிதான். மேற்படி 46 சென்ட் முழுவதையும் 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தான் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்யும் போது னது தந்தை மற்றும் பெரியப்பா ஆகிய இருவரும் ஆண்டியப்பன் என்பவருக்கு எதிராக அசல் வழக்கு எண்.296/1986 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி அசல் வழக்கின் வழக்கு பதிவேட்டு நகலை தாக்கல செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கின் வழக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்தவிதமான ஆவணங்களும் முன்னிலை படுத்தவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி அசல் வழக்கில் 1 மற்றும் 3 பிரதிவாதிளாகிய பழனிவேல் மற்றும் பெரியசாமி ஆகியோர் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.296/1986 ன் தீர்ப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை. வருவாய் துறை

ஆவணங்களில் மேற்படி அசல் வழக்கு எண்.296/1986 ன் தீர்ப்பானது குறிப்பு செய்யப்பட்டுள்ளதா என்றால் குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பு சம்மந்தமான சான்றிட்ட வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்தவிதமான சின்ன குறிப்பு எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.8 புல எண்.944 ற்கான நிலபுல வரைபடத்தின் கணினி பதிவிறக்க நகலை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றும், முறையாக சான்று நகலை தாக்கல் செய்யிவ்லலை என்றால் சரியல்ல. புல எண்.944/1C ல் நான் பாதை உள்ளதாக உரிமை கோரியுள்ள நிலையில் அதன் நீள அகலத்தை காண்பிக்கும் பொருட்டு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். புல எண்.944/1C யை பொறுத்து எனது தந்தை பெயரிலோ, எனது பெரியப்பா பெயரிலோ பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

5. ஆண்டியப்பன் என்பவர் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு செயது கிரைய ஆவணத்திலும் மேற்படி பாதை விவரமானது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆண்டியப்பன் அவருக்கு முழுவதும் பாத்தியப்பட்ட சொத்துக்களையும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தற்போது விற்பனை செய்துவிட்டார் என்றும், அவ்வாறு புல எண்.944/1C ல் பாதை இருப்பின் மேற்படி பாதை விவரமானது கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு விற்பனை செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண்.296/1986 வழக்கின் தீர்ப்பானது 1 முதல் 3 பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

6. எனக்கு சட்டப்படியோ, அனுபவபடியோ புல எண்.944/1C ல் பாதை உரிமை இருப்பின் அதை பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. புல எண்.944/1C ல் பாதைக்காக எதுவும் உட்பிரிவு செய்து வருவாய்துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையில், புல எண்.944/1C ல் எதாவது உரிமை இருப்பின், நீதிமன்ற ஆணையர் மூலம் எனது உரிமையை நிலைநிறுத்த நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், அவ்வாறு நான் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி பாதையை எந்த காலத்திலும் பிரதிவாதிகளின் அனுமதி

பெற்றோ, தன்னிச்சையாகவோ அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள நிலங்களுக்கு சென்று வர தனியாக பாதையானது கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் தாவா அ,ஆ,இ அட்டவணை சொத்துக்கள் என்று தனியாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் சாரம்சம் வழக்கிற்காக பொய்யாக கட்டமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புல எண்.944/1C ல் பாதை உள்ளதாக நான் கூறியுள்ள நிலையில் மேற்படி பாதையானது வண்டிப்பாதையா, நடைபாதையா என்று நிலபுல வரைபடத்தில் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. ஆண்டியப்பனிடமிருந்து புல எண்.843 நிலத்தை பொறுத்து எழுதி வாங்கியதாக கூறியுள்ள ஆவணத்தை இவ்வழக்கில் எங்கள் தரப்பில் முன்னிலை படுத்தியுள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் புல எண்.944/1C ல் பாதை உரிமை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புல எண்.944/1C ல் சட்டப்படியான பரிகாரம் கேட்க வேண்டும் என்றால், விளம்புகை பரிகாரம் தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல. எவ்வித உரிமையும் இல்லாதநிலையில் தான் இவ்வழக்கிகை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மட்டும் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

9. புல எண்.944/1C ன் உரிமையாளரான ஆண்டியப்பனிடமிருந்து முன் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாதையை சட்டம் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மேலாக நான் எவ்வித இடையூறு இன்றி நாங்கள் அனுபவம் செய்து வருவதாக உரிமை கோரியுள்ள நிலையில் அதனை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**